

கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் ஏழை எளிய மக்கள் பயனடைய திமுக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் தங்கள் வீடு அருகே குடிசை மற்றும் ஓட்டு வீடுகளில் வசிப்பவர்களுக்கு உதவ வேண்டும் என்று ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வேண்டுகோள் விடுத்ததோடு ஊரக வளர்ச்சித்துறை மூலம் தமிழக முதல்வரின் சாதனை திட்டங்கள் கிராமப்புற மக்களுக்கு 100 சதவீதம் சென்றடைகிறது என்று அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார். அருகில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், திமுக நிர்வாகி அம்பை ரவி உட்பட பலர் உள்ளனர்.

### ரூ.13 கோடியில் திண்டுக்கல் மாவட்டம்-

# ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் கலை - அறிவியல் கல்லூரி!

## அமைச்சர் இ.பெரியசாமி அடிக்கல் நாட்டினார்

திண்டுக்கல், ஜூலை 15-

ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.13.00 கோடி மதிப்பீட்டில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான பணிகளை அமைச்சர் பெரியசாமி தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் மொ.நா.பூங்கொடி, தலைமை வகித்தார்.திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர்ர.சச்சிதானந்தம் முன்னிலை வகித்தார்

இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சராக பொறுப்பேற்றதிலிருந்து தமிழக மக்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து தொடர்ந்து செயல்படுத்தி, இந்தியாவிலயே தலைசிறந்த முதலமைச்சராக திகழ்கிறார்கள். தொடர்ந்து, கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் பின்தங்கிய பகுதி என்பதால் கல்லூரி அமைப்பது மக்களுக்கு அவசியமாகிறது. கல்லூரி அமைப்பதன் மூலம் பொது மக்கள் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி தரப்பட்டுள்ளது.

இக்கல்லூரி யான தற்காலிக கட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி 07.07.2022 முதல் இயங்கி வருகிறது.

அரசு கல்லூரி அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடம் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரூ.13.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். கல்லூரியானது 3 தளங்களுடன் வகுப்பறைகள், ஆய்வகங்கள், பேரராசியர்கள் அறைகள், முதல்வர் அறைகள், கூட்டரங்குகள், விளையாட்டு மைதானம், குடிநீர் வசதிகள், கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்படவுள்ளது. இதன் மூலம் இப்பகுதி மாணவர்கள் உயர்தரமான கல்வி பயில வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்கள் விடுக்கும் கோரிக்கைகளுக்கு காது கொடுத்து கேட்டு, அதை உடனடியாக தீர்க்க வேண்டும் என்பதற்காக மக்களுடன் முதல்வர் என்ற சிறப் புத்திட்டத்தினை ஊரக பகுதிகளில் 10.07.2024 அன்று துவக்கி வைத்தார்கள்.

இதன் மூலம் ஏராளமான பொதுமக்களுக்கு அரசின் நலத்திட்டங்கள் சென்று சேர்த்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களை தமிழக அரசின் சார்பில் மக்களின் நலனுக்காக செயல்படுத்தப்படுறளகிறது. இது மக்களுக்கான அரசு, மக்களுக்காக செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் அதரவுடன் இருந்து வருகிறரார்கள் என ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில்திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல், ரெட்டியார் சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் ப.க.சிவ குருசாமி, ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியக்குழு துணைத் தலைவர் த. ராஜேஸ்வரி தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊராட்சிக் குழு ஊறுப்பினர் சு.சுப லெட்சுமி, ஊராட்சி மன்ற தலைவர்கள் கன்னிவாடி தனலெட்சுமி சண்முகம், மூல ச்சத்திரம் வி.லெட்சுமி, கொத்தப்புள்ளி சுந்தரி அன்பரசு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இன்று 148 வது பிறந்த நாள்: தனித்தமிழ் இயக்கத் தந்தை

# மறைமலை அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள் மரியாதை!

சென்னை, ஜூலை 15 -

தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் செய்தி வெளியீடு வருமாறு:

தமிழகப் புலவர் பெருமக்களுள் மறைத்திரு மறைமலையடிகளார், தனித்தமிழ்த் தந்தையாக மட்டுமின்றித் தனித்திறம் படைத்த பல்கலைப் பேரறிஞராக விளங்கினார். தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளில் வல்லுநராகத் திகழ்ந்த அடிகளார் சமயம், சமுதாயச் சீர்திருத்தம் நலத்துறை ஆகிய மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படும் துறைகளிலும் தமது அறிவாற்றலைச் செலுத்தி அரிய பல நூல்களைத் தனித்தமிழில் எழுதியும் மன்றங்களிலும், மாநாடுகளிலும் அரிய உரைகளை நிகழ்த்திய பண்பாளராகத் திகழ்ந்தவர் ஆவார்.

தமிழர்கள் அனைவரும் தூயதமிழ் பேச வேண்டும் என்ற நோக்கில் ‘தனித்தமிழ் இயக்கம்’ தொடங்கித் தமிழுக்காக செழும் பணியாற்றியவர் மறைமலையடிகள். பாங்கறிந்து சொற்பொழிவுகள் ஆற்ற வல்லவர், சைவத் திருப்பணியும் சீர்திருத்தப் பணியும் செவ்வனே செய்த செம்மல். ‘தமிழ்க்கடல்’, ‘தனித்தமிழின் தந்தை’ என்றெல்லாம் தமிழுலகத்தால் போற்றப்பட்டவர் மறைமலையடிகள் ஆவார்.

தவத்திரு மறைமலையடிகள் 1876ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 15ஆம் நாள் நாகைப்பட்டினத்தில் பிறந்தார். இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்று மாணவர்களுக்கு எளிய முறையில் பாடம் கற்பித்தவர். திராவிட மஞ்சரி, பாசுகர ஞானோதயம், நீலலோசனி, ஞானசாகரம் ஆகிய இதழ்களில் இவரின் தீஞ்சுவைக் கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பட்டினப்பாலை, முல்லைப் பாட்டு ஆகிய நூல்களுக்கு ஆராய்ச்சியுரை எழுதியும்,திருவொற்றியூர் முருகன்மும்மணிக்கோவை, சோமசுந்தரக் காஞ்சியாக்கம் முதலிய செய்யுள் நூல்களையும், சிந்தனைக் கட்டுரைகள், அறிவுரைக் கொத்து, சிறுவர்களுக்கான செந்தமிழ், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் போன்ற கட்டுரை நூல்களையும், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி, கோகிலாம்பாள் கடிதங்கள் முதலிய புதினங்களையும் எழுதியுள்ளார். வடமொழியில் காளிதாசர் எழுதிய சாகுந்தலத்தை மொழிபெயர்த்து சாகுந்தல நாடகம் என்ற பெயரில் நூலையும், அம்பிகாபதி அமராவதி என்ற நாடக நூலையும் எழுதியுள்ளார்.

‘தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை’ மறைமலையடிகளாரின் 148 ஆவது பிறந்தநாளினை முன்னிட்டு அவரைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் செங்கல்பட்டு மாவட்டம், பல்லவபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச் சிலைக்கு 15.07.2024 திங்கட்கிழமையன்று காலை 10.30 மணிக்குத் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தாம்பரம் மாநகராட்சி மேயர், தாம்பரம் மாநகராட்சியின் துணை மேயர், செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் தமிழறிஞர்கள்ஆகியோரால் மலர் வணக்கம் செய்யும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் தமிழ் வளர்ச்சித் துறை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட சரலூரில் ரூ1.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய வணிக வளாக கட்டிடத்தினை கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் மாநகராட்சி ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா துணை மேயர் திருமதி. மேரி பிரின்ஸி லதா, மண்டல தலைவர் முத்துராமன், மாமன்ற உறுப்பினர் ரமேஷ், இளநிலைப் பொறியாளர் திருமதி. தேவி, வட்டச் செயலாளர் முருகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பாக முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழாமுன்னிட்டு தெற்கு மாவட்ட கழக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆணைக்கிணங்க திருப்பரங்குன்றத்தில் உள்ள குரு பேட்மிட்டன் அகாடமியில் மாவட்ட அளவிலான இறகு பந்து போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்குதெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.விமல் வடக்கு பகுதி செயலாளர் கிருஷ்ண பாண்டியன் 98 வது வட்டக் கழகச் செயலாளர் எம்.ஆர்.பி.ஆறுமுகம் ஆகியோர் பரிசினை வழங்கி வீரர்களை பாராட்டி பொன்னாடை போர்த்தி வாழ்த்தினர். உடன் கருவேலம் பட்டி வெற்றி கார்த்தி விருமாண்டி கழகத்தினர் உள்ளனர்.

### விக்கிரவாண்டி தொகுதியில் மாபெரும் வெற்றி!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் மூன்றாண்டு சாதனைகளே சான்று!

## அமைச்சர் முனைவர் க.பொன்முடி பேட்டி!

விழுப்புரம், ஜூலை 15-

விக்கிரவாண்டி தொகுதி வெற்றிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மூன்றாண்டு சாதனைகள் தான் காரணம் என உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தெரிவித்தார்.

அமைச்சர் முனைவர் க.பொன்முடி செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

விக்கிரவாண்டி தொகுதியில் 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் மாபெரும் வெற்றி பெற்ற அன்னியூர் சிவா அவர்களுக்கு முதலில் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் மக்கள் பணிக்கு விக்கிரவாண்டி தொகுதி மக்கள் வாக்களித்துள்ளார்கள் பெருவாரியான வாக்குகள் அளித்த விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வெற்றிக்கு காரணம் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு க ஸ்டாலின் அவர்கள் தான் காரணம், அவர்களுடைய திட்டங்களான மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் இலவச பேருந்து பயணம், புதுமைப்பெண் திட்டம், காலை உணவுத்திட்டம், நான் முதல்வன் திட்டம், தமிழ் புதல்வன், திட்டம் இது போன்ற பல்வேறு திட்டங்களால் மக்கள் பெரும் பயன் அடைந்து, அவர்களின் திட்டங்களால் ஈர்க்கப்பட்டு இன்று நாடே திரும்பிப் பார்க்கும் வகையில் ஒரு மாபெரும் வெற்றியை விக்கிரவாண்டி தொகுதி மக்கள் முதலமைச்சர் அவர்களின் மூன்றாண்டு கால ஆட்சிக்கு பரிசாக தந்துள்ளனர்.

வருகிற சட்டமன்றத் தேர்தலுக்கு இது முன்மாதிரியான தேர்தலாக அமைந்துள்ளது 2026 சட்டமன்றத் தேர்தலில் தேர்தலில் 234 தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறுவது உறுதி. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்கள் கிராமப்புற மக்களிடையே முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது. மாணவ, மாணவிகள் அவருடைய திட்டங்களால் பயன்பெறுகின்றனர். அதனால் தான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு வாக்களித்துள்ளனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இங்கு இரண்டு நாட்கள் சுற்றுப்பயணம் செய்து சூறாவளி பிரச்சாரம் மேற்கொண்ட இளைஞர்களை ஈட்டி முனைகளாக தீட்டி வரும் கழக இளைஞரணிச் செயலாளர் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் வெகுவாக மக்களை ஈர்த்துள்ளது. கடந்த தேர்தலில் அவர் ஒரு செங்கல்லை வைத்துக் கொண்டே பிரச்சாரம் செய்தது மிகவும் மக்களை கவர்ந்தது. அதேபோல் இந்த விக்கிரவாண்டி தொகுதியில் அவர் மேற்கொண்ட பிரச்சாரமும் பெருவாரியான மக்களை கவர்ந்துள்ளது.

இங்கு தேர்தல் பொறுப்பாளராக என்னையும், கழக கொள்கை பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்களையும் கழகத் தலைவர் அவர்கள் நியமித்துள்ளார். மேலும் விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளராக டாக்டர் பொன். கௌதம சிகாமணி அனைவரும் இணைந்து பணியாற்றியதற்கு கிடைத்த வெற்றி இது என்பதை யாராலும் மறுக்க முடியாது. இன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவிக்கும் அறிக்கையில் விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும், அதே போல் எனக்கும், எஸ். ஜெகத்ரட்சகன் எம்.பி. அவர்களுக்கும் மாவட்ட பொறுப்பாளராக தேர்வு செய்யப்பட்டுள்ள டாக்டர் பொன். கௌதம



சிகாமணி அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும் இந்தியா கூட்டணி நிர்வாகிகளுக்கும் அவர் தனது அறிக்கையின் மூலம் நன்றிகளை தெரிவித்தார். அவர் வழியில் நானும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆணையிட்டதன் பேரில் நாங்கள் கழக திராவிடமாடல் ஆட்சியின் மூன்றாண்டு கால சாதனைகளை மக்களிடம் சென்று பரப்பினோம், கூறினோம். நமது மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி அவர்களும் தொடர்ந்து பணியாற்றி இந்த மாபெரும் வெற்றியை பெற்றுள்ளோம்.

இந்த மாபெரும் வெற்றிக்கு உழைத்த அமைச்சர் பெருமக்கள், இந்தியா கூட்டணி நிர்வாகிகள், அதே போல திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் அனைவருக்கும் என்னுடைய சார்பிலும், விழுப்புரம் தெற்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதம சிகாமணி சார்பிலும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். நம்மை பிரிந்தும் பிரியாமல் நம் நினைவுகளிலேயே வாழும் நா.புகழேந்தி விட்டுச் சென்ற பணிகளை அன்னியூர் சிவா சிறப்பாக மக்கள் பணியாற்றுவார் அவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் இராமதாஸ் அவர்களும் பா.ம.க வும் நேரத்திற்கு, நேரம் மாறுவார்கள் இது தான் அவர்களுடைய கொள்கை, அந்தக் கட்சிக்கு கொள்கை கிடையாது அப்படியிருந்தால் அவர்கள் பா.ஜ.க.வுடன் கூட்டணி வைப்பார்களா? நீட் தேர்வு வேண்டாம் என கூறுகிறார்கள் ஆனால் பா.ஜ.க வுடன கூட்டணி வைத்துள்ளார்கள். பா.ஜ.க தலைவர் அண்ணாமலையிடம் பேசி நீட் தேர்வுக்கு விளக்கு கொண்டு வர வேண்டியது தானே, அவர்கள் எப்போதும் தேர்தலுக்கு, தேர்தல் மாறிக் கொண்டே இருப்பார்கள். அவருடைய மகன் அன்புமணி ஒன்றிய அமைச்சராக வேண்டும் என தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தார். இப்போது அமைச்சராக்க வேண்டும் என பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துள்ளார்கள் அவர்களுக்கு கொள்கை கிடையாது, மக்கள் நலனில் அக்கறை கிடையாது. அதனால் தான் அவர்களுக்கு விக்கிர வாண்டி தொகுதி மக்கள் தக்க பாடம் கற்பித்துள்ளார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மீது நம்பிக்கை மக்கள் வாக்களித்துள்ளனர். அன்னியூர் சிவா சிறப்பாக மக்கள் பணியாற்றுவார்.

இவ்வாறு செய்தியாளர்களிடம் அமைச்சர் முனைவர் க.பொன்முடி கூறினார்.

### குற்றாலத்தில்

# தொடர் மழையால் நீர்வரத்து அதிகரிப்பு!

## சுற்றுலா பயணிகள் குளிக்க தடை!

நெல்லை, ஜூலை 15–

குற்றாலத்தில் கடந்த வாரம் சாரல் நன்றாக பெய்த நிலையில், 2 நாட்களாக வெயில் அடித்தது. நேற்று மதியம் வரை நல்ல வெயில் காணப்பட்டது.

மதியத்திற்கு பிறகு வெயில் மறைந்து திடீரென மேக கூட்டம் திரண்டு காணப்பட்டது. மாலையில் சாரல் பெய்தது. மேற்குத் தொடர்ச்சி மலை, குற்றாலம், தென்காசி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலைக்கு பிறகு சாரல் பெய்தது. இதனால் அனைத்து அருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்தது. புலியருவி, சிற்றருவிகளில் தண்ணீர் நன்றாக விழுந்தது.

இந்நிலையில் தொடர் மழையால் நேற்றிரவு மெயினருவி, ஐந்தருவி, பழைய குற்றாலத்தில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதையடுத்து பாதுகாப்பு கருதி மெயினருவி, ஐந்தருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க போலீசார் தடை விதித்தனர். இதனால் சுற்றுலா பயணிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

பழைய குற்றாலத்தில் இரவு நேரத்தில் குளிக்க அனுமதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் நிகழ்வு தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது.அதன்படி இளைஞரணி செல்வபெருமாள் ஏற்பாட்டில் டவுண் குறுக்குத்துறை ஆதரவற்றோர் முதியோர் இல்லத்தில் காலை, மதியம்,இரவு ஆகிய மூன்று வேளை உணவு வழங்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று உணவுகளை வழங்கினார். நிகழ்வில் ஸ்டார் முருகன், சிவா, கேபிள் குமரேசன், ஷெட்டி, மகாராஜன், கிருஷ்ணகுமார், பத்மா, சுப்ரித் சுப்பிரமணியன், வினோத், ஐகோர்ட் மகாராஜா, சிவசுப்பிரமணியன், விஷ்ணு ராகவன், சுதாகர், மாதேஷ், சதீஷ், கதிர், சிராப்தி உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.




விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க. அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து கொண்டாட்டங்கள் நடைபெற்று வரும் நிலையில் விருதுநகர் வடக்கு மாவட்ட நகரக் கழக திமுக நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன், வடக்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி. ராஜகுரு தலைமையில் தேசபந்து மைதானத்தில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் பட்டாசு வெடித்தும் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகரத் துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே. ரமேஷ் குமார், 1வார்டு பாரத் செவல்பட்டி சேகர், நகர இளைஞரணி ஏ.ஆர். கார்த்திக், அயலக அணி மா. பாரத் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.